தரம்-5 மாணவர்களுக்கான சுய கற்றல் கையேடு

# தமிழ்மொழி

கொவிட் - 19 காலத்தில் மாணவர்கள் சுயமாகக் கற்கும் வகையில் அனுபவம் வாய்ந்த ஆரம்பக்கல்வி ஆசிரியர்களால் தயாரிக்கப்பட்டது.

www.lkedu.lk

**ஆரம்பப்பிரிவு**

**கல்குடா வலயக்கல்வி அலுவலகம்**

**வாழைச்சேனை**

பிரசுர அன்பளிப்பு:- வாகரை மறுமலர்ச்சி ஒன்றியம்.

அன்பான மாணவர்களே,

உலகளாவிய ரீதியில் பரவியுள்ள கொவிட்-19 தொற்றினால் இழந்த கல்வியை மிக விரைவாகப் பெற்றுக்கொள்ளவேண்டியது உங்களது பொறுப்பாகும். எதிர்வரும் காலங்களில் நடைபெறவுள்ள பொதுப்பரீட்சையில் சித்தியடையவேண்டுமாயின் இழப்புக்களைப் பற்றிச் சிந்திக்காமல் தொடர்ந்து சுய கற்றலைப் பயனுள்ளதாக மேற்கொள்வதன் மூலமே அது சாத்தியமாகும். உங்களது சுயகற்றலை மேலும் விருத்திசெய்யும் வகையிலேயே இக்கைந்நூல் தயாரித்து வழங்கப்படுகின்றது.

கல்குடா வலயக்கல்விப் பணிப்பாளர் திரு.தி.ரவி அவர்களின் ஆலோசனைக்கமைய பிரதிக்கல்விப் பணிப்பாளர்(கல்வி அபிவிருத்தி) அவர்களின் மேற்பார்வையின் கீழ் உதவிக்கல்விப் பணிப்பாளர், ஆசிரிய ஆலோசகர்கள், எமது வலய ஆசிரியர்கள், ஆகியோரால் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டதால் மிகவும் பயன்மிக்க பெறுமதியான கையேடாக இது விளங்குகின்றது. எனவே கடையில் வாங்கிய பொருத்தமற்ற பயிற்சிப் புத்தகங்களைத் தவிர்த்து இக்கைந்நூலைப் படித்துப் பயன்பெறுங்கள்.

இக்கையேட்டினை கோறளைப்பற்றுக் கோட்ட மாணவர்களுக்காக அச்சிட்டு வழங்குவதற்காக முன்வந்த வாகரை மறுமலர்ச்சி ஒன்றியத்திற்கு மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு அவர்களது சேவையையும் பாராட்டுகின்றேன்.


இதனைக் கற்பதற்காக

- பொருத்தமான நேர அட்டவணையைத் தயாரித்து அதன்படி சுயகற்றலை மேற்கொள்க.
- வீட்டிலுள்ளவர்களின் உதவியையும் நீங்கள் பெற்றுக்கொள்ளலாம்.
- தேவையேற்படும்போது உங்கள் வகுப்பாசிரியரின் உதவியை நாடலாம்.

திரு.க.ஜெவதனன்
உதவிக்கல்விப் பணிப்பாளர்- ஆரம்பக்கல்வி
கோட்டக்கல்விப் பணிப்பாளர் - கோறளைப்பற்று வடக்கு
கல்குடா வலயக்கல்வி அலுவலகம்,
வாழைச்சேனை.


www.lkedu.lk

# தமிழ் எழுத்துக்களின் வகைகள்





## ❖ உயிர் எழுத்துக்கள் (12)

➢ அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ




## ❖ மெய் எழுத்துக்கள்

க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்




## ❖ உயிர்மெய் எழுத்துக்கள்

**உயிர் எழுத்துக்களும் மெய் எழுத்துக்களும் சேர்ந்து உயிர்மெய் எழுத்துக்கள் உண்டாகின்றன.**

**மெய் + உயிர் = உயிர்மெய்**

**உதாரணம்**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| க் | + அ | = | க | க் | + ஆ | = | கா |
| க் | + இ | = | கி | க் | + ஈ | = | கீ |
| க் | + உ | = | கு | க் | + ஊ | = | கூ |

## ❖ ஆய்த எழுத்து - ∴

www.lkedu.lk

# திணை

❖ திணை வகுப்பு அல்லது பிரிவு எனப் பொருள்படும்

❖ அது **உயர்திணை, அ்.றிணை என** இரு வகைப்படும

➢ **உயர்திணை**

- மக்கள், தேவர், நரகர் ஆகியவர்கள் உயர்திணையில் அடங்குவர்.

**உதாரணம் :-** மதன், மாலதி, தந்தை, பாத்திமா, மேரி,
ஆசிரயர், குயவன், பாடகி, சித்தி

➢ **அ்.றிணை**


- உயர்திணையைச் சேராத உயிர் உள்ளனவும் உயிர் அற்றனவும் அ்.றிணையில் அடங்கும்.
- அதாவது மக்கள், தேவர், நரகர் அல்லாத மற்ற உயிர் உள்ள, உயிர் அற்ற எல்லாம் அ்.றிணையில் அடங்கும்.

**உதாரணம் :-** மரம், ஆடு, மாடு, கதிரை, இலை, நாய்,
கொக்கு, பூக்கள், புல், காடு, குடம், நிலம்

# பால்

❖ பால் என்றால் பிரிவினர் எனப் பொருள்படும்.

❖ உலகிலுள்ள அனைத்தையும் திணை அடிப்படையில் பால்களாகப் பிரிக்கலாம்.




❖ **ஆண்பால்**

- உயர்திணைப் பொருள்களில் ஆண்களில் ஒருமையைக் குறிப்பது ஆண்பால் எனப்படும்.
- உதாரணம் : தம்பி, சங்கரன், கரீம், நடிகன், உழவன், அப்பா, மாணவன்

www.lkedu.lk

### ❖ பெண்பால்

- உயர்திணையில் பெண்களில் ஒருமையைக் குறிப்பது பெண்பால் எனப்படும்.
- உதாரணம் : அம்மா, யாழினி, ஆயிஷா, தங்கை, மாமி, மேரி, சர்மிளா, அனுலா

### ❖ பலர்பால்

- உயர்திணையைச் சேர்ந்த எல்லாப் பன்மைச் சொற்களும் பலர்பால் எனப்படும்.
- உதாரணம் :- **மக்கள், ஆண்கள், பெண்கள், மாணவர்கள், சிறுவர்கள்**

| |
|---|
| **ஆண்கள்** என்னும் சொல் **ஆண்களில் பலரைக்** குறிக்கின்றது |
| **பெண்கள்** என்னும் சொல் **பெண்களில் பலரைக்** குறிக்கின்றது |

### ❖ ஒன்றன்பால்

- அ.்றிணையில் ஏதேனும் ஒன்றைக் குறிப்பது ஒன்றன்பால் எனப்படும்.
- உதாரணம் : ஆடு, மாடு, கதிரை, மரம், வீடு, பறவை, மயில்

### ❖ பலவின் பால்

- அ.்றிணையில் பலவற்றைக் குறிப்பது பலவின்பால் எனப்படும்.
- உதாரணம் : ஆடுகள், மரங்கள், வீடுகள், கிளிகள், பூக்கள், பறவைகள், மிருகங்கள், கோழிகள்

## எண்

➢ எண் என்பது எண்ணிக்கையைக் குறிக்கும்.

➢ எண் இரண்டு வகைப்படும்.


### ❖ ஒருமை

- ஏதேனும் ஒன்றை குறிப்பது ஒருமை எனப்படும்.
- ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால், எனும் மூன்றும் ஒருமைக்குரிய பால்களாகும்.

### ❖ பன்மை

- பலவற்றைக் குறிப்பது பன்மை எனப்படும்.
- பலர்பால், பலவின்பால் எனும் இரண்டும் பன்மைக்குரிய பால்களாகும்.

www.lkedu.lk




## இடம்

- உரையாடலில் பேசுபவர், கேட்பவர், பேசப்படும் பொருள் என்று மூன்று நிலைகள் உள்ளன. அம்மூன்று நிலைகளையும் சுட்டுவது இடம் எனப்படும்.
- இடம் மூன்று வகைப்படும். எனவே இதை மூவிடம் என்று கூறுவார்கள்.




| | தன்மை | முன்னிலை | படர்க்கை |
|---|---|---|---|
| **உதாரணம்** | நான் | நீ | அவன், அவள், |
| | யான் | நீர் | அவர் அவர்கள் |
| | நாம் | நீவீர் | அது, அவை, |
| | நாங்கள் | நீங்கள் | காந்தன், கிளி, |

- தன்மை, முன்னிலை பெயர்கள் பால் காட்டுவதில்லை.
- அவை ஒருமை பன்மை என எண் வேறுபாட்டைக் காட்டும்.

உதாரணம்

ஒருமை:- யான், நான், நீ, நீர்

பன்மை:- நீங்கள், நீவிர், நீயிர், நாம், நாங்கள்

www.lkedu.lk

# வாக்கிய உறுப்புக்கள்

- ஏதாவது ஒரு கருத்தை முழுமையாக உணர்த்தும் சொற்றொடர் வாக்கியம் எனப்படும். வாக்கியத்தில் எழுவாய், பயனிலை, செயற்படுபொருள் ஆகிய முக்கியமான மூன்று உறுப்புக்கள் உள்ளன.
- ஒரு வாக்கியத்தை பயனிலை இன்றி அமைக்க முடியாது.

## ➢ பயனிலை

- எழுவாயின் செயலை விளக்குவது பயனிலை ஆகும்.
- ஒரு வாக்கியத்தின் இறுதியில் வரும் வினைச் சொல் பயனிலை ஆகும்.

உதாரணம் :- ரமணன் கணினி **வாங்கினான்** → **பயனிலை**

## ➢ எழுவாய்

- **ஒரு வாக்கியத்தில் இடம்பெறும் பயனிலைக்கு வினவப்படும் யார்?, எது?, எவை? என்னும் கேள்விகளுக்கு கிடைக்கும் விடை எழுவாய் ஆகும்.**

**உதாரணம் :- அதிபர்** மாணர்களைப் பாராட்டினார். எனும் வாக்கியத்தில் **யார்** பாராட்டினார்? என வினாவும்போது எழுவாயை இனங்காணமுடியும். இங்கு எழுவாய் அதிபர் என்பதாகும்.

## ➢ செயற்படுபொருள்

- ஒரு வாக்கியத்தின் பயனிலைக்கு, யாரை?, எதை?, எவற்றை? என்னும் கேள்விகளுக்கு கிடைக்கும் விடை செயற்படுபொருளாகும்.

உதாரணம் :- தீபா **முயலை** வளர்த்தாள்.

எதை வளர்த்தாள்? **முயலை** – செயற்படுபொருள்

- வாக்கிய உறுப்புக்களை பின்வரும் உதாரணம் மூலம் விளங்கிக் கொள்ளலாம்.

1. **சிறுவர்கள் வாத்தியங்கள் இசைத்தனர்**
2. **தாத்தா பேரனை வாழ்த்தினார்.**
3. **மாணவர்கள் பாடல்களைப் பாடினர்.**
4. **ஆசிரியர் புத்தகத்தை எடுத்தார்.**
5. **கரீம் பாடம் படித்தான்.**

| | எழுவாய் | பயனிலை | செயற்படுபொருள் |
|---|---|---|---|
| 1. | சிறுவர்கள் | இசைத்தனர் | வாக்கியங்கள் |
| 2. | தாத்தா | வாழ்த்தினார் | பேரனை |
| 3. | மாணவர்கள் | பாடினர் | பாடல்களை |
| 4. | ஆசிரியர் | எடுத்தார் | புத்தகத்தை |
| 5. | கரீம் | படித்தான் | பாடம் |

www.ikedu.lk

# அடைமொழிகள்

எழுவாய் அடைமொழி | பயனிலை அடைமொழி | செயற்படுபொருள் அடைமொழி

## ❖ எழுவாய் அடைமொழி

**உதாரணம்**

| **சாதாரண வாக்கியம்** | **எழுவாய் அடைமொழியுடனான வாக்கியம்** |
|---|---|
| **1.** முயல் ஓடியது. | **வெள்ளை** முயல் ஓடியது. |
| 2. கிளி பறந்தது. | **பச்சைக்** கிளி பறந்தது. |
| 3. தம்பி பாட்டுப் பாடினான். | **சின்னத்** தம்பி பாட்டுப் பாடினான். |

## ❖ பயனிலை அடைமொழி

**உதாரணம்**

| **சாதாரண வாக்கியம்** | **பயனிலை அடைமொழியுடனான வாக்கியம்** |
|---|---|
| 1. முயல் ஓடியது. | முயல் **மெதுவாக** ஓடியது. |
| 2. கிளி பறந்தது. | கிளி **வேகமாக** பறந்தது. |
| 3. தம்பி பாட்டுப் பாடினான் | தம்பி பாட்டுப் **இனிமையாகப்** பாடினான். |

## ❖ செயற்படுபொருள் அடைமொழி

**உதாரணம்**

| **சாதாரண வாக்கியம்** | **செயற்படுபொருள் அடைமொழியுடனான வாக்கியம்** |
|---|---|
| **1.** பாத்திமா குடை வாங்கினார். | பாத்திமா **பச்சைக்** குடை வாங்கினார். |
| 2. சங்கரன் தொப்பி அணிந்தான். | சங்கரன் **வட்டத்**தொப்பி அணிந்தான். |
| 3. குமார் ஓவியம் வரைந்தான். | குமார் அழகிய ஓவியம் வரைந்தான். |

**தொகுப்பு.**
**திருமதி.நி.பிரகலாதன்.**
**மட்/ககு/ஒருமுழச்சோலை ஸ்ரீ சித்திவிநாயகர் வித்தியாலயம்.**

www.lkedu.lk

## நிறுத்தக் குறிகள்

| | | | |
|---|---|---|---|
| • | - முற்றுப்புள்ளி | , | - காற்புள்ளி |
| ? | - வினாக்குறி | ! | - வியப்புக்குறி |
| “ ” | - மேற்கோட்குறி | | |

➢ முற்றுப்புள்ளி ( . ) :- வாக்கிய முடிவைக் காட்டுவது முற்றுப்புள்ளி ஆகும்.
உதாரணம் - ஆதவன் ஓவியம் வரைகின்றான்.

➢ காற்புள்ளி ( , ) :- சொற்களைத் தனித்தனியாகவோ அடுக்காகவோ பிரிக்கும் போது காற்புள்ளி இட வேண்டும்.

உதாரணம் - மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன ஐம்புலன்களாகும்.

➢ வினாக்குறி ( ? ) :- ஒரு வாக்கியம் வினா வாக்கியமாக அமையின் அதற்கு இறுதியில் வினாக்குறி இடப்படும்.

உதாரணம் - இலங்கையின் தேசிய மலர் எது?

➢ வியப்புக்குறி ( ! ) :-இதனை உணர்ச்சிக்குறி என அழைப்பர். வியப்பு, மகிழ்ச்சி, அதிர்ச்சி, இரக்கம் போன்ற உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் வாக்கியங்களின் முடிவில் வியப்புக்குறி இடப்படும்.

உதாரணம் -

1. ஆ....எவ்வளவு பெரிய சிலை! - வியப்பு
2. நாம் எதிர்பார்த்ததை விட காட்சி சிறப்பாக நடந்து முடிந்தது! - மகிழ்ச்சி
3. அவன் சென்ற பேருந்து விபத்துக்குள்ளாகியது! - அதிர்ச்சி
4. ஆயிரக்கணக்கான வீடுகள் சூறாவளியால் தரைமட்டமாகிவிட்டன! - இரக்கம்
5. உற்பத்திப் பொருட்கள் இன்மையால் தொழிற்சாலை மூடப்படுமோ! - அச்சம்

➢ மேற்கோட்குறி - (“ ”) :- ஒருவர் கூறிய சொற்களை அவர் கூறியவாறே எடுத்தாளும் போது இரட்டை மேற்கோட்குறி இடப்படும்.
உதாரணம் - “அறம் செய விரும்பு ” என்றார் ஔவைப்பாட்டி.

www.lkedu.lk

# பெயர்ச் சொற்கள்

ஐம்புலனுக்கும் மனதிற்கும் புலப்படும் பொருளைக் குறிக்கும் சொல் பெயர்ச்சொல் எனப்படும். இது ஆறு வகைப்படும். அவையாவன

1. பொருட்பெயர்
2. இடப்பெயர்
3. காலப்பெயர்
4. சினைப்பெயர்
5. குணப்பெயர்
6. தொழிற்பெயர்

- பொருட்பெயர்

  உயிர் உள்ள, உயிர் இல்லாத பொருள்களின் பெயர்களைக் குறிப்பது பொருட்பெயர் எனப்படும்.

  உதாரணம் - அமுதன் , சிங்கம் , கிளி, கதிரை

- இடப்பெயர்

  ஏதேனும் ஓர் இடத்தைக் குறிக்கும் பெயர் இடப்பெயர் எனப்படும்.

  உதாரணம் - புத்தளம், கண்டி, மட்டக்களப்பு, வீடு, முற்றம்

- காலப்பெயர்

  ஏதேனும் ஒரு காலத்தைக் குறிக்கும் பெயர் காலப்பெயர் எனப்படும்.

  உதாரணம் - திங்கட்கிழமை, தை, காலை, மாலை, மணித்தியாலம்

- சினைப்பெயர்

  பொருள்களின் உறுப்புக்களைக் குறிக்கும் பெயர் சினைப்பெயர் எனப்படும்.
  சினை என்றால் உறுப்பு என்று பொருள். உயர்திணைப் பொருள்களின் உறுப்புக்களையும் , அ.்றிணைப் பொருள்களின் உறுப்புக்களையும் குறிக்கும்.

  உதாரணம் - கை, கண், கிளை, இலை, வால்

- குணப்பெயர்

  ஒரு பொருளின் குணத்தை உணர்த்தும் பெயர் குணப்பெயர் எனப்படும். நிறம் , சுவை, வடிவம் , அளவு ஆகியவற்றின் அடிப்படையில் குணப்பெயர் வரும்.

  உதாரணம் - சிவப்பு, இனிப்பு, கருமை, சதுரம்

- தொழிற்பெயர்

  ஏதேனும் ஒரு தொழிலை உணர்த்தும் பெயர் தொழிற்பெயர் எனப்படும்.

  உதாரணம் - படித்தல், ஓடுதல், விளையாடுதல்

www.lkedu.lk

➢ பெயர்ச்சொற்கள் திணை, பால் , எண் , இடம் என்பவற்றை உணர்த்தும்.

| பெயர்ச் சொற்கள் | திணை | பால் | எண் | இடம் |
|---|---|---|---|---|
| அவன் , தம்பி | உயர்திணை | ஆண்பால் | ஒருமை | படர்க்கை |
| அவள் , தங்கை | உயர்திணை | பெண்பால் | ஒருமை | படர்க்கை |
| அவர்கள் , சிறுவர்கள் | உயர்திணை | பலர்பால் | பன்மை | படர்க்கை |
| அது, பசு | அ.ஃறிணை | ஒன்றன்பால் | ஒருமை | படர்க்கை |
| அவை, ஆடுகள் | அ.ஃறிணை | பலவின்பால் | பன்மை | படர்க்கை |

தொகுப்பு:-

செல்வி.தி.தர்சிக்கா - (மட்/ககு/காயான்கேணி சரஸ்வதி வித்தியாலயம்.)

திருமதி.யாழினி - (மட்/ககு/உதயன்மூலை விவேகானந்தா.வித்தியாலயம்.)

## எதிர்ப்பாற் சொற்கள்

சிறுவன் - சிறுமி

செல்வன் - செல்வி

சேவகன் - சேவகி

தம்பி – தங்கை

புத்திரன் - புத்திரி

நண்பன் - நண்பி

பணிடிதன் - பண்டிதை

சீமான் சீமாட்டி

நாயகன் -நாயகி

மாணவன் - மாணவி

வீரன் - வீராங்கனை

சிறியவன்- சிறியவள்

பூட்டன்-பூட்டி

பெரியம்மா-பெரியப்பா

குணவான் -குணவதி

மாணவன்-மாணவி

முதல்வன்-முதல்வி

## எதிர்ப்பாற் சொற்கள்

பேரரசன் - பேரரசி

மருமகன் - மருமகள்

பாக்கியவான் - பாக்கியவதி

மூத்தவன் - மூத்தவள்

அரசன் - அரசி

தலைவன் - தலைவி

மகன் - மகள்

நிபுணன் - நிபுணை

நடிகன் - நடிகை

தோழன் - தோழி

சகோதரன் - சகோதரி

புதல்வன் - புதல்வி

பேரன் - பேர்த்தி

புண்ணியவான் - புண்ணியவதி

பாடகன் - பாடகி

மருத்துவன் - மருத்துவிச்சி

மைத்துனன் - மைத்துனி

எசமான் - எசமாட்டி, எசமானி

www.lkedu.lk

# அகராதியைப்பயன்படுத்துவதற்காக வழங்கப்பட்ட சொற்களின் கருத்துக்கள்

புகழ் - கீர்த்தி

ஒழுக்கம் - முறைப்பட வாழும் வாழ்க்கை, நடத்தை

புலவர் - அறிஞன்

கோடை – கொடை ஈகை

ஆசனம் - இருக்கை

தொகுதி - கூட்டம் திரட்டு

கோள் - கிரகம்

அறிவுறுத்தல் - தெரிந்து கொள்ளச்செய்தல்

அவனி – பூமி

ஓய்வு – ஆறுதல்

நன்னெறி – ஒழுக்க வழி

நெஞ்சம் - உள்ளம்

இன்சொல் - இனிய சொல்

புன்னகை – புன்னகை, சிரிப்பு

வெட்கம் - கூச்சம் , அவமானம்

ஊற்று – சுரத்தல் , சிதறுதல்

அறிவியலாளர் - கண்டுபிடிப்பாளர் , விஞ்ஞானி

விநியோகம் - வழங்குதல்

வெற்றி- ஜயம் , முயற்சியின் முடிவில் கிடைப்பது

வானூர்தி – ஆகாய விமானம் , விண்ணோடம்

பொறியியல் - கட்டடங்கள், இயந்திரங்கள் கட்டும் நுட்பங்கள் பற்றி விளக்கும் கலைத்துறை

துரிதம்- விரைவு வேகமாக

ஆலோசனை – சிந்தித்தல்

கௌரவம் - கீர்த்தி, செம்மை

திட்டம் - ஏற்பாடு , ஒப்புரவு

தூதுவன் - ஏவலாளன் , செய்தி அனுப்புபவன்

அனுமதி – சம்மதம் , இசைவு , கட்டளை

வரம்பு – எல்லை , அணை

தேடல்- ஒரு பொருளை,விடயத்தை கண்டறியும் முயற்சி

வரம்பு – எல்லை , அணை

கதிர் - ஒளி , பயிரின் கதிர்

ஆரோக்கியம் - சௌக்கியம் , நோயின்மை

வேடர் - வேடுவ தொழில் செய்பவர்

முனிவர் - யோகி ,இடுடி, தவம் செய்பவர்

www.lkedu.lk

ஓடம் - தோணி , தெப்பம்

கானகம் - வனம் , அடவி, காடு

ஆச்சிரமம் - முனிவர்கள் வசிக்குமிடம்

பர்ணசாலை – ஆச்சிரமம்

வையகம் - உலகம் , பூமி

வனிதை :- பெண்

கங்கை – ஆறு

புதையல்-மறைத்து வைக்கப்பட்ட பொருள்

ஆகாரம் - உணவு , உண்டி

மனை – வீடு, இல்லம்

மேடு - உயரமான நிலப்பகுதி

குடி – சாதி , இனம் , குடித்தல்

ஏற்றம் - பெருவாழ்வு

உற்றார் - சுற்றத்தார்

மாநிலம் - பிரிக்கப்பட்ட பெருநிலம்

பேதை - அறிவிலி

கலாசாரம் - தனிப்பட்ட பண்பாடு

மரபு – தொன்று தொட்டு வரும் முறை

சம்பிரதாயம் - தொன்று தொட்டு வரும் வழக்கம்

வழக்காறு - நடைமுறை

புத்துணர்ச்சி –மகிழ்ச்சியும் ஊக்கமும் தரும் உணர்வு,அனுபவம்

நிலைமை - இருக்குமியல்பு , பதவி

பண்பாடு – ஒரு தேசத்து மக்களின் நாகரிகம், சிந்தனை

உக்குதல் - இற்றுப்போதல்

திசை – திக்கு, அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசம்

களிப்பூட்டல் - மகிழ்வூட்டல்

காரியம் - செய்கை நோக்கம்

சிற்பம் - ஓவியம்

ஆராய்ச்சி - பரிசீலனை

தடாகம் - குளம் ,ஏரி , ஓடை

உறுதி – நிச்சயம்

தொல்பொருள் - பழைமையான பொளுள்

பள்ளம்- குழி தாழ்வு

நாட்டியம் - கூத்து , நடனம்

குளிர் - குளிர்மை , தண்மை

கவி – பாட்டு , செய்யுள்

தரை – நிலம், பூமி

www.lkedu.lk

ஓடம் - தோணி , தெப்பம்

கானகம் - வனம் , அடவி, காடு

ஆச்சிரமம் - முனிவர்கள் வசிக்குமிடம்

பர்ணசாலை – ஆச்சிரமம்

வையகம் - உலகம் , பூமி

வனிதை :- பெண்

கங்கை – ஆறு

புதையல்-மறைத்து வைக்கப்பட்ட பொருள்

ஆகாரம் - உணவு , உண்டி

மனை – வீடு, இல்லம்

மேடு - உயரமான நிலப்பகுதி

குடி – சாதி , இனம் , குடித்தல்

ஏற்றம் - பெருவாழ்வு

உற்றார் - சுற்றத்தார்

மாநிலம் - பிரிக்கப்பட்ட பெருநிலம்

பேதை - அறிவிலி

கலாசாரம் - தனிப்பட்ட பண்பாடு

மரபு – தொன்று தொட்டு வரும் முறை

சம்பிரதாயம் - தொன்று தொட்டு வரும் வழக்கம்

வழக்காறு - நடைமுறை

புத்துணர்ச்சி –மகிழ்ச்சியும் ஊக்கமும் தரும் உணர்வு,அனுபவம்

நிலைமை - இருக்குமியல்பு , பதவி

பண்பாடு – ஒரு தேசத்து மக்களின் நாகரிகம், சிந்தனை

உக்குதல் - இற்றுப்போதல்

திசை – திக்கு, அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசம்

களிப்பூட்டல் - மகிழ்வூட்டல்

காரியம் - செய்கை நோக்கம்

சிற்பம் - ஓவியம்

ஆராய்ச்சி - பரிசீலனை

தடாகம் - குளம் ,ஏரி , ஓடை

உறுதி – நிச்சயம்

தொல்பொருள் - பழைமையான பொளுள்

பள்ளம்- குழி தாழ்வு

நாட்டியம் - கூத்து , நடனம்

குளிர் - குளிர்மை , தண்மை

கவி – பாட்டு , செய்யுள்

தரை – நிலம், பூமி

www.lkedu.lk

புன்முறுவல் - முகமலர்ச்சி , சிரிப்பு

சம்பவம் - நிகழ்வு , பிறப்பு

சங்கடம் - வருத்தம் , தொந்தரவு

அதிசயம் - ஆச்சரியம் ,வியப்பு

அளவளாவுதல்- கலந்தாலோசித்தல்

ஏடு – புத்தகம் , பனுவல்

பள்ளு – உழவர் பாடல்

மறை – வேதம், மறைத்தல்

கீர்த்தி – புகழ்

ஆன்றோர் - பெரியோர் , தேவர்

நன்றி – உபகாரம் , கணம் , அறம்

ஆற்றல் - வல்லமை

மனு – விண்ணப்பம் , தருமநூல்

அற்புதம் - அதிசயம்

இரகசியம் - அந்தரங்கம் , மறைபொருள

மருந்து – ஔடதம்

தகவல்- செய்தி

பன்முகம்- பல்வகை

ஆணவம் – மற்றவரை மதிக்காத தன்மை, இறுமாப்பு

ஆணிவேர் - தண்டின் அல்லது அடிப்பாகத்தின் தொடர்ச்சியாக மண்ணில் நேராக இறங்கும் பெரிய வேர்

அகடவிகடம் - தந்திரம்

அகத்தி – ஒருவகை மரம்

அகரவரிசை- அகரவரிசைப்படி சொற்களின் ஒழுங்கு முறை

உற்றார் -நெருங்கிய உறவினர்

ஆயத்தம்- முன்னேற்பாடு, தயாராக இருக்கும் நிலை

ஆயர்வேதம்– பண்டைக்காலம் முதல் நம் நாட்டில் வழங்கிவரும் வைத்திய முறை

உறிஞ்சுதாள்- மை முதலியவற்றை உறிஞ்சி உள்ளிழுத்துக்கொள்ளும் தாள்

உறுதி – பத்திரம், உரிமைச்சாசனம்

இலைபோடு – (இலையைப்போட்டு) உணவு பரிமாறுவதற்காக ஆயத்தஞ்செய்தல்

ஆய்வுகூடம் – சோதனைகளுக்குத் தேவையான கருவிகள் இருக்குமிடம்

ஆதிவாசி – தொன்றுதொட்டு வாழும் சமுதாயம்

ஆணவம் – மற்றவரை மதிக்காத தன்மை, இறுமாப்பு

தொகுப்பு: செ.செந்தில்குமார்(ஆசிரியர்)
மட் /ககு/கறுவாக்கேணி கனிஸ்ட



www.lkedu.lk

# இசைக்கருவிகள்

**இசைக் கருவிகளின் வகைகள்**

1. தோற்கருவிகள்
2. நரம்புக் கருவிகள்
3. துளைக் கருவிகள்
4. கஞ்சக் கருவிகள்

1. **தோற்கருவிகள்** - தோலை இறுக்கிக் கட்டி அத்தோலைத் தட்டுவதன் மூலம் ஒலியை எழுப்பக்கூடிய வாத்தியங்கள் தோற்கருவிகளாகும் தவில், கஞ்சிரா, மிருதங்கம், தபேலா ஆகியவை தோற்கருவிகளாகும்



**தவில்**


**மிருதங்கம்**





**தபேலா**

**கஞ்சிரா**



2. **நரம்புக்கருவிகள்** - தந்திகள் மூலம் நாதம் உண்டாகும் வாத்தியங்கள் நரம்புக் கருவிகளாகும். தம்பூரா, வீணை, கித்தார், வயலின், கோட்டு வாத்தியம் என்பன நரம்புக்கருவிகளாகும்

**தம்பூரா**



**வீணை**





**வயலின்**

**கித்தார்**



www.lkedu.lk

**துளைக்கருவிகள்** - இசைக்கருவிகளில் உள்ள துளைகளின் ஊடாகக் காற்று புகுந்து வெளிவருவதன் மூலம் இசை உண்டாகும் வாத்தியங்கள் துளைக்கருவிகளாகும்.

**நாதஸ்வரம்**





**புல்லாங்குழல்**

**மகுடி**



**கஞ்சக் கருவிகள்** - உலோகத்தினால் செய்யப்பட்ட இசைக்கருவிகள் கஞ்சக்கருவிகள் ஆகும்.

**மோர்சிங்**



**கைத்தாளம்**




- **கிராமிய இசைக்கருவிகள்**

**எக்காளம்**



**கஞ்சிரா**



**உடுக்கை**



**தம்பட்டம்**



**தவண்டை**



**கடம்**



# பேச்சுவழக்கு, எழுத்துவழக்குச் சொற்கள்

| பேச்சு வழக்குச் சொற்கள் | எழுத்து வழக்குச் சொற்கள் | பேச்சு வழக்குச் சொற்கள் | எழுத்து வழக்குச் சொற்கள் |
|---|---|---|---|
| புட்டு | பிட்டு | அற்ப்பம் | அற்பம் |
| நாங்க | நாங்கள் | பாச்சல் | பாய்ச்சல் |
| பதட்டம் | பதற்றம் | அடமானம் | அடைமானம் |
| அங்க | அங்கே | அருகு | அருகாமை |
| வெத்திலை | வெற்றிலை | வலதுபக்கம் | வலப்பக்கம் |
| இளனி | இளநீர் | அடமழை | அடைமழை |
| தேத்தண்ணி | தேநீர் | எண்ணை | எண்ணெய் |
| கத்திரிக்கோல் | கத்தரிக்கோல் | ஒத்தடம் | ஒற்றடம் |
| கருவப்பிலை | கறிவேப்பிலை | சந்தணம் | சந்தனம் |
| சிகப்பு | சிவப்பு | யாவாரம் | வியாபாரம் |
| காச்சல் | காய்ச்சல் | குடசி | கடைசி |
| வேர்வை | வியர்வை | ஆயிதம் | ஆயுதம் |
| சவுக்காரம் | சவர்க்காரம் | ஓட்டறை | ஓட்டடை |
| துலகணி | தலையணை | குடுத்தல் | கொடுத்தல் |
| கைமாறு | கைம்மாறு | திருவுதல் | துருவுதல் |
| தீவாளி | தீபாவளி | தண்ணி | தண்ணீர் |
| கோடாலி | கோடரி | அங்கிட்டு | அந்தப்பக்கம் |
| போயிலை | புகையிலை | பேந்து | பின்னர் |
| சீயக்காய் | சிகைக்காய் | புண்ணாக்கு | பிண்ணாக்கு |
| கட்டிடம் | கட்டடம் | அருவாள் | அரிவாள் |
| சமயல் | சமையல் | ஈக்கு | ஈர்க்கு |
| பழமை | பழைமை | எலிமிச்சம்பழம் | எலுமிச்சம்பழம் |
| நாகரீகம் | நாகரிகம் | கண்முளித்தல் | கண்விழித்தல் |
| கடமை | கடைமை | பொட்டை | பெட்டை |
| பொக்களம் | கொப்புளம் | மம்பட்டி | மண்வெட்டி |
| ஊந்து | ஊர்ந்து | வெண்காயம் | வெங்காயம் |
| செய்நன்றி | செய்ந்நன்றி | வைக்கல் | வைக்கோல் |
| ஆம்பிளை | ஆண்பிள்ளை | தகமை | தகைமை |
| கிணத்தில் | கிணற்றில் | வேணும் | வேண்டும் |
| சம்பாரித்தல் | சம்பாதித்தல் | லட்சம் | இலட்சம் |
| நெத்தி | நெற்றி | ரோமம் | உரோமம் |
| கிறுகி | சுழன்று | அதுகள் | அவை |
| பயத்தங்காய் | பயற்றங்காய் | இளைமை | இளமை |
| அண்டைக்கு | அன்றைக்கு | உடமை | உடைமை |
| அப்ப | அப்போது | ஒருவள் | ஒருத்தி |
| ஆத்தங்கரை | ஆற்றங்கரை | சிலவு | செலவு |
| உசிர் | உயிர் | தமயன் | தமையன் |
| வெக்கம் | வெட்கம் | தாப்பாள் | தாழ்ப்பாள் |
| இலட்சினை | இலச்சினை | துடப்பம் | துடைப்பம் |
| சேதி | செய்தி | நோம்பு | நோன்பு |
| புடவை, பிடவை | புடைவை | பொம்பிளை | பெண்பிள்ளை |
| ரதம் | இரதம் | முயற்ச்சி | முயற்சி |
| லாபம் | இலாபம் | வென்னீர் | வெந்நீர் |

www.ikeed.lk

| | | | | |
|---|---|---|---|---|
| வெங்கலம் | வெண்கலம் | | தவக்களை | தவளை |
| ஓம்பது | ஒன்பது | | தாவாரம் | தாழ்வாரம் |
| குடிச்சேன் | குடித்தேன் | | நிலமை | நிலைமை |
| மண்ணெண்ணை | மண்ணெண்ணெய் | | பயிற்ச்சி | பயிற்சி |

## லகர, ளகர, ழகர வேறுபாடு

1. உலவு – உலவுதல்
2. உழவு – பயிர்த்தொழில்
3. கலை – வித்தை /ஆண்மான்
4. களை – நீக்கு /வேற்றுபயிர்
5. தலை – சிரசு
6. தழை – தாவரமொன்றின் இலை
7. வேலை – தொழில்
8. வேளை – பொழுது
9. நீலம் - ஒரு நிறம்
10. நீளம் - அளவு
11. புலி – ஒரு மிருகம்
12. புளி – கறிக்குப் பயன்படுவது
13. வலை – மீன் பிடிக்கும் வலை
14. வளை – புற்று /வீட்டு வளை
15. வாளை – ஒரு மீன்
16. வாழை – ஒரு மரம்

## ரகர, றகர வேறுபாடு

1. அரி – அரிதல்
2. அறி – தெரி / உணர்
3. அருகு – விளிம்பு
4. அறுகு – ஒரு புல்
5. இரக்கம் - மனவுருக்கம்
6. இறக்கம் - இறங்குகை/சரிவு
7. ஊரி – ஒருவகைச்சங்கு
8. ஊறி – கசிந்து

## னகர, ணகர வேறுபாடு

1. கனி – பழம்
2. கணி – கணித்தல்
3. கனை – கனைத்தல்
4. கணை – அம்பு
5. தன்மை – குணம் /மூவிடப்பெயர்
6. தண்மை – குளிர்ச்சி

## ஒத்தகருத்துச் சொற்கள்

1. அழகு – வனப்பு
2. அறிவு – புத்தி
3. உடல் - சரீரம்
4. உண்மை – வாய்மை
5. களிப்பு – உவகை
6. சினம் - கோபம்
7. சுத்தம் - புனிதம்
8. துன்பம் - இடர்
9. நித்திரை – உறக்கம்
10. உணவு – ஆகாரம்
11. கூரியது - கூர்மையுள்ளது
12. கூறியது - கூறப்பட்டது
13. தெரி – தெரிந்தெடு
14. தெறி – பொத்தான் /விசுறுதல்
15. பரி – குதிரை
16. பறி – பிடுங்குதல்
17. பொரி - வறு /தானியப்பொரி
18. பொறி – செதுக்கு /தீப்பொறி /எலிப்பொறி
19. தினை – தானியம்
20. திணை – ஒழுக்கம்
21. பன் - ஒருவகைப்புல்
22. பண் - பாடலுக்குரிய இராகம்
23. பேன் - தலைப்பேன்
24. பேண் - காப்பாற்று

## எதிர்கருத்துச் சொற்கள்

1. அண்மை – சேய்மை
2. ஆக்கம் - அழிவு
3. இலாபம் - நட்டம்
4. இளமை –முதமை
5. உயர்வு – தாழ்வு
6. உறவு – பகை
7. ஏற்றுமதி - இறக்குமதி
8. ஒளி - இருள்
9. சாதகம் - பாதகம்
10. ஞாபகம் - மறதி

www.lkedu.lk

# நிகழ்ச்சி நிரல் ஒழுங்கமைவு

மாணவர் மன்றம் 2020

நிகழ்ச்சி நிரல்

திகதி:- 2020.06.15 நேரம்:- பி.ப.1.00 மணி

இடம்:- பாடசாலை ஒன்றுகூடல் மண்டபம்

## நிகழ்வுகள்

1. மங்கள விளக்கேற்றல்
2. இறைவணக்கம்
3. வரவேற்புரை
4. தலைமையுரை
5. சென்ற கூட்டறிக்கை வாசித்தல்
6. மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள்
7. நன்றியுரை
8. தேசியகீதம்

www.lkedu.lk

## தொடர் மொழிக்கு ஒரு மொழி

1. அகரவரிசைப்படி பொருள் கூறும் நூல் -அகராதி
2. முனிவர்கள் வசிக்குமிடம் - ஆச்சிரமம்
3. வீண் செலவு செய்பவன் -ஊதாரி
4. நம்பமுடியாத கதை –கட்டுக்கதை
5. தேர்தல் ஒன்றில் போட்டியிடுபவர் -வேட்பாளர்
6. ஒரே பாடசாலையில் ஒன்றாகப் படித்தவன் -சகபாடி
7. மற்றவர்களைப்பற்றி அக்கறையில்லாதவன் -சுயநலவாதி
8. ஒரு தாய் வயிற்றில் பிறந்தவர் -சகோதரர்
9. தம்மைப்பற்றித் தாமே எழுதும் சரிதை –சுயசரிதை
10. தெருக்கள் கூடுமிடம் -சந்தி
11. ஒரே சமயத்தில் எட்டு விடையங்களை அவதானிக்கும் ஆற்றல் படைத்தவன் - அட்டாவதானி
12. கலைகளை மேடை ஏற்றும் முன் சரி பிழை பார்த்துத் திருத்தும் நிகழ்வு –ஒத்திகை
13. பகையரசருக்குக் கொடுக்கப்படும் திறைப் பொருள் -கப்பம்
14. ஒன்று போலிருக்கும் மற்றொன்று – போலி
15. ஒரே சமயத்தில் நூறு விடையங்களை அவதானிக்கும் ஆற்றல் படைத்தவன் - சதாவதானி
16. வைத்தியரின்றி தாமே தமது நோய்க்குச் செய்யும் மருந்து – கைம்மருந்து
17. எதிர்கால நிகழ்ச்சிகளை அறியும் ஆற்றல் படைத்தவன் - தீர்க்கதரிசி
18. அறிஞர்கள் வாதிடும் களம் -பட்டிமன்றம்
19. ஒன்றைப்போல் பிரதி எடுத்தல் -படியெடுத்தல்
20. ஒரு நூலை வெளியிடுவோர் அந் நூலைப்பற்றிக் கூறும் உரை –பதிப்புரை
21. இலை, தளை கொண்டு வேயப்பட்ட குடிசை –பன்னசாலை
22. புதிதாகச் செய்த கப்பல், தேர் என்பவற்றை முதன் முதலாகச் செலுத்திப்பார்த்தல் - வெள்ளோட்டம்
23. ஒரே தண்டில் பல மலர்கள் மலர்ந்துள்ள பூங்கொத்து- மஞ்சரி
24. நூலாசிரியர் ஒருவர் தான் இயற்றிய நூலின் முன்னே தன்னைப் பற்றிக் கூறும் உரை – முன்னுரை

## விழாக்கள்

1. இருபத்தைந்தாவது ஆண்டில் எடுக்கப்படும் விழா – வெள்ளி விழா
2. ஐம்பதாவது ஆண்டின் இறுதியில் எடுக்கப்படும் விழா –பொன் விழா
3. அறுபதாவது ஆண்டின் இறுதியில் எடுக்கப்படும் விழா –வைர விழா, மணி விழா
4. எழுபத்தைந்தாவது ஆண்டின் இறுதியில் எடுக்கப்படும் விழா –பவள விழா
5. நூறாவது ஆண்டின் இறுதியில் எடுக்கப்படும் விழா – நூற்றாண்டு விழா

## மரபுத்தொடர்

1. ஆறப்போடுதல் -பிற்போடுதல், காலம் தாழ்த்துதல்
2. ஆழம் பார்த்தல் -ஒருவரது அறிவு செல்வம் முதலியவற்றை அளவிடுதல்
3. கண் திறத்தல் -அறிவு உண்டாதல்
4. கங்கணங்கட்டுதல் -ஒரு செயலை முடிக்க முனைந்து நிற்றல்
5. கதை வளர்தல் -பேச்சை விரித்தல்
6. கை தூக்குதல் - துன்பத்திலிருந்து காப்பாற்றுதல்
7. தலை கவிழ்தல் - வெட்கமடைதல்
8. தட்டிக் கழித்தல் - சாக்குப்போக்குச் சொல்லுதல்
9. தாளம் போடுதல் - பிறரை மகிழ்விக்க அவர் கருத்துப்படி நடத்தல்
10. நாக்குப் புரளுதல் - சொன்ன சொல் தவறுதல்
11. நட்டாற்றில் விடல் -ஆபத்து வேளையில் கைவிடல்
12. பூசி மெழுகுதல் - குற்றத்தை மறைக்கப் பார்த்தல்
13. முன்னுக்கு வருதல் - உயர்ச்சியடைதல்
14. வாயூறுதல் - ஆசைப்படுதல்
15. தட்டிக்கொடுத்தல் - உற்சாகப்படுத்தல்

## பழமொழிகள்

1. அகத்தின் அழகு முகத்தில் தெரியும். – ஒற்றுமையே பலம்
2. அழுதபிள்ளை பால் குடிக்கும். – முயற்சி செய்தவர் பயன் பெறுவார்
3. ஆத்திரக்காரனிற்கு புத்தி மட்டு.-கோபம் சிந்தனைக்கு இடையூறு
4. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு.- ஒற்றுமை
5. ஆனைக்கும் அடிசறுக்கும. – பெரியவர்களும் தவறு விடுவர்
6. ஆழமறியாது காலை விடாதே. – ஆராய்ந்து செய்
7. இளமையிற் கல்வி சிலையில் எழுத்து. – இளவயதுக் கல்வி நிலைத்திருக்கும்
8. கந்தையானாலும் கசக்கிக் கட்டு. – வறுமையிலும் செம்மை
9. கூடி வாழ்ந்தால் கோடி நன்மை. – ஒற்றுமையின் சிறப்பு
10. மின்னுவதெல்லாம் பொன்னல்ல. – கவர்ச்சியானவையெல்லாம் நல்லவையல்ல
11. பொறுத்தார் பூமியாழ்வார். – பொறுமையின் முக்கியத்துவம்
12. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். – சுகதேகியாக வாழ்வதே பெரும் செல்வம்
13. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு. – ஒற்றுமையே பலம்
14. அடிமேல் அடியடித்தால் அம்மியும் நகரும். – விடாமுயற்சி
15. ஆற்றிலே போட்டாலும் அளவறிந்து போடு. – எதையும் அளவோடு செய்தல் வேண்டும்
16. உப்பிட்டவரை உள்ளளவும் நினை. – நன்றி மறவேல்
17. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா. – இளமையிற் செய்

www.lkedu.lk

18. ஒருபானைச் சோற்றிற்கு ஒருசோறு பதம். – ஒருவரது சிறு செயல் அவரது சுபாவத்தை தெரிவிக்கும்
19. கடுகு சிறிதானாலும் காரம் பெரிது. – சிறியதன் சிறப்பு
20. காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு. – அவரவர் பிள்ளை அவரவர்க்கு பெரிது
21. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள். – சந்தர்ப்பத்தை நழுவவிடக் கூடாது
22. குற்றமுள்ள நெஞ்சு குறு குறுக்கும். – மனச்சாட்சி உறுத்தும்
23. சிறுதுளி பெருவெள்ளம். - சேமிப்பின் மகிமை
24. சூடுகண்ட பூனை அடுப்பங்கரை நாடாது. – அனுபவம் ஆபத்துவராமல் தடுக்கும்
25. மனமுண்டானால் இடமுண்டு. – ஒரு செயலை நிறைவேற்றுவதற்கான மனமுண்டானால் நிறைவேற்றலாம்
26. இளங்கன்று பயமறியாது. – இளமைத்துணிச்சல்
27. இக்கரை மாட்டிற்கு அக்கரைபச்சை. – திருப்திப்படாத மனம்
28. பழகப் பழகப் பாலும் புளிக்கும். – எதையும் தொடர்ந்து செய்தால் சலிப்பு ஏற்படும்
29. தவளை தன் வாயாற் கெடும். – சிந்திக்காமல் பேசுவது ஆபத்தை ஏற்படுத்தும்
30. போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து. – மன நிறைவே சிறந்த செல்வம்
31. சிறு துரும்பும் பல் குத்த உதவும். – எதையும் குறைவாக மதிப்பிடக் கூடாது
32. குற்றம் பார்க்கின் சுற்றமில்லை. – குறை கூறிக்கொண்டிருந்தால் உறவினர் விலகிப்போவார்
33. நிழலின் அருமை வெயிலில் தெரியும். – ஒன்றின் அருமை இன்னொரு சந்தர்ப்பத்தில் தெரியும்
34. அன்பான சினேகிதனை ஆபத்தில் அறியலாம். – உத்தம நட்பு
35. உண்ணாச் சொத்து மண்ணாப்போகும். – உலோபம் கூடாது
36. உப்பில்லாப் பண்டம் குப்பையிலே. – சுவையில்லா உணவில் பயன் கிடையாது
37. குப்பையில் கிடந்தாலும் குண்டுமணி மங்காது. – நற் புகழ் மங்குவதில்லை
38. சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம் - தொடர்பயிற்சியும் விடாமுயற்சியும் வெற்றிக்கு வழி

www.lkedu.lk

# விடுகதைகள்

1. மனிதன் செய்யாத குடை மழைக்குப் பிடிக்காத குடை – காளான்
2. முட்டையிடும் அடைகாக்கத் தெரியாது கூட்டிலே குடியிருக்கும் கூடு கட்டத்தெரியாது – குயில்
3. உள்ளே இருந்தால் ஓடித்திரிவான் வெளியெ வந்தால் மடிந்து விடுவான் அவன் யார் - மீன்
4. ஒருவனை அழைத்தால் ஊரையே கூட்டுவான் - காகம்
5. காகிதத்தைக் கண்டால் கண்ணீர் விடும் - பேனா
6. மீன் பிடிக்கத் தெரியாது ஆனால் வலை பின்னும் - சிலந்தி
7. வாசலிலே வண்ணப்பூ தினம் தினம் மாறும் பூ தெளிவாகத் தோன்றும் பூ - கோலம்
8. ஆயிரம் நூல் பின்னலை அள்ளி அள்ளித் தின்னலாம் - இடியப்பம்
9. வாலுண்டு உயிரில்லை அங்குமிங்கும் பறப்பான் - பட்டம்
10. ஒளி கொடுக்கும் விளக்கல்ல சூடு கொடுக்கும் நெருப்பல்ல - சூரியன்
11. பச்சைப் பெட்டிக்குள் வெள்ளை முத்து – வெண்டிக்காய்
12. நெருப்புப்பட்டுச் சிவந்தவனிற்கு நீண்ட ஆயுள் - இரும்பு
13. நீர் நிறைந்திருக்கும் நெற்றியிலே கண்ணிருக்கும் - இளநீர்
14. வெளியே விரியும் உள்ளே சுருங்கும் - குடை
15. கத்தியின்றி இலைகள் வெட்டும் - வெட்டுக் கிளி
16. வெள்ளத்தால் போகாது வெந்தணலிலும் வேகாத கொள்ளையடிக்கவும் முடியாது கொடுத்தாலும் குறையாது – கல்வி
17. காற்று நுளைந்ததும் கானம் பாடுவான் - புல்லாங்குழல்
18. தனித்தும் உண்ண முடியாது இது சேராவிட்டாலும் உண்ண முடியாது –உப்பு
19. வெட்டிக்கொள்வான் ஆனாலும் ஒட்டிக் கொள்வான் - கத்தரிக்கோல்
20. ஒட்டியவன் ஒருவன் பிரித்தவன் இன்னொருவன் - கடிதம்
21. ஏற்றி வைத்து அணைத்தால் எரியும்வரை மணக்கும் - ஊதுபத்தி
22. தலையில் கிரீடம் வைத்த தங்கப்பழம் - அன்னாசி
23. தலைக்குள் கண்கள் வைத்திருப்பான் - தேங்காய்
24. கண்ணால் பார்க்கலாம் ஆனால் கையால் பிடிக்க முடியாது – புகை
25. யாரும் தயாரிக்காத கதவு தானே திறந்து தானே மூடும் - கண்ணிமை
26. அடிக்கமாட்டான் திட்டான் ஆனால் கண்ணீரை வரவைப்பான் - வெங்காயம்
27. கண்ணில் தென்படும் கையில் பிடிபடாது – நிழல்
28. உலகெல்லாம் உறங்கிவிடும் ஆனால் இவர்கள் மட்டும் உறங்கமாட்டார்கள் - கடிகாரமுட்கள்
29. நான்கு கால்கள் கொண்டவன் ஆனால் அவனிற்கு வாய் கிடையாது - நாற்காலி
30. பாடுவான் ஆடமாட்டான் பேசுவான் அசையமாட்டான் அவன் யார்? - வானொலிப்பெட்டி
31. உலகில் மெலிந்தவன் உடைகளைக் காப்பவன் அவன் யார்? - தையல் ஊசி
32. சின்னப்பெட்டிக்குள் கீதங்கள் ஆயிரம் ஆயிரம் அது என்ன ?– ஆர்மோனியப்பெட்டி

www.ikedu.lk

33. மெல்லியதாயிருக்கும் தண்ணீரில் மிதக்கும் ஆயிரம் பேர் சேர்ந்தாலும் அதனைத் தூக்க முடியாது – நீர்க் குமிழி
34. மரத்தில் தொங்கும் இனிப்புப் பொட்டலத்திற்குக் காவலர்களே அதிகமாம் - தேன் கூடு
35. முகத்தைக் காட்டுவான் முதுகைக் காட்டமாட்டான் - முகம் பார்க்கும் கண்ணாடி
36. கண்ணுக்கு அலங்காரம் பார்வைக்கு உத்தரவாதம் - மூக்குக் கண்ணாடி
37. ஓடையில் ஓடாத நீர் ஓருவரும் பருகாத நீர் - கண்ணீர்
38. கடல் நீரால் வளர்வான் மழை நீரால் மடிவான் - உப்பு
39. விடிந்தவுடன் வேலை செய்வான் வேலையில்லையேல் மூலையில் கிடப்பான் - தும்புத்ததடி
40. அடி காட்டில் நடு மாட்டில் நுனி வீட்டில் அது என்ன? - நெல்
41. ஆனை விரும்பும் சேனை விரும்பும் அடித்தால் வலிக்கும் கடித்தால் இனிக்கும் - கரும்பு
42. இணைபிரியமாட்டார்கள் நண்பர்கள் அல்ல ஒன்று சேரமாட்டார்கள் பகைவர்களல்ல – தண்டவாளம்
43. உடல் சிவப்பு வாய் திறந்திருக்கும் உணவு காகிதம் –அஞ்சற்பெட்டி
44. ஊரைச் செழிக்க வைத்து உல்லாச நடை பயின்று வளைந்து குலுங்கி வையமெல்லாம் சுற்றி வருவாள் ஒரு வனிதை – கங்கை
45. எல்லையில்லா அழகி எட்டி நிற்கும் இரும்பையும் தன்பால் கவர்ந்து இழுப்பாள் - காந்தம்
46. வீட்டில் இருப்பான் ஒரு காவலாளி வெளியில் சுற்றுவான் அவன் கூட்டாளி அவர்கள் யாவர்? பூட்டும் திறப்பும்
47. மொட்டைப் பாட்டிக்கு உச்சியிலே குடுமி அது என்ன? தேங்காய்
48. நீட்டிக் கொண்டு நீளமாகவும் படுப்பேன் சுருட்டிக் கொண்டு மூலையிலும் நிற்பேன் நான் யார்? பாய்
49. தாளைக் கொடுத்தால் உண்ணும் தண்ணீர் கொடுத்தால் மடியும் அது என்ன? நெருப்பு
50. வயலுக்கு எல்லை ஆவான் தன் தலையையே நடக்க கொடுப்பான் அவன் யார்? வரப்பு
51. பாரினில் வந்து சேரும் முன்னே பத்து மாதம் சிறை வாசம் அது எது? பிறப்பு
52. சாண் உயர சிறுவன் வைத்ததெல்லாம் சமைப்பான் அவன் யார்? அடுப்பு
53. படகுக்கு கையாவான் பயணத்திற்கு உதவுவான் அவன யார்? துடுப்பு
54. ஈட்டிப்படை வென்று காட்டுப்புதர் கடந்து இனிமையான புதையலைக் கண்டெடுக்கலாம் அது என்ன? பலாப்பழம்
55. ஏற முடியாத இடத்தில் எட்டப் பறக்கும் பனித்துளி அது என்ன? முகில்
56. ஐந்து அடுக்கு நாலு இடுக்கு அது என்ன? விரல்கள்
57. ஒளி கொடுக்கும் விளக்கல்ல வெப்பம் தரும் நெருப்பல்ல பளபளக்கும் தங்கமல்ல அது என்ன? சூரியன்
58. ஓடிப்படர்வேன் கொடி அல்ல ஒளி மிக உண்டு நிலவுமல்ல மனைகளை அலங்கரிப்பேன் மலரல்ல அது என்ன? மின்சாரம்

www.lkedu.lk

## அறிவித்தல், ஆறிவுறுத்தல்,கட்டளைகள்

அறிவித்தல்களும் , அறிவுறுத்தல்களும் ஒரே மாதிரியாகத் தோன்றினாலும் சகலரும் பொதுவாக அறிந்திருக்க வேண்டியவற்றை அறியத் தருவன அறிவித்தல்கள் எனப்படும்.

குறிப்பிட்ட குழுவினரை முன்னிலைப்படுத்தி அவர்கள் பின்பற்றி நடைமுறைப்படுத்துவதற்கு உதவும் வகையில் உடன்பாடாகவோ எதிர்மறையாகவோ அறிவுரை கூறும் பாங்கில் அமைவன அறிவுறுத்தல்கள் எனவும் அழைக்கப்படுகின்றன.

### கட்டளைகள்

அதிகாரத்துடன் கட்டாயப்படுத்தும் ஒரு பணிப்பாகும்.

### அறிவித்தல்கள்

- நூலகத்தில் அமைதியைப் பேணவும்.
- நூலகத்திற்கு வரும் போது அங்கத்துவ அட்டையைக் கொண்டு வரவும்.
- நூலகம் காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை திறந்திருக்கும்.
- ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மாலை 3 மணிக்கு சிறுவர்களுக்கான கதை சொல்லும் நிகழ்வு நடைபெறும்.
- பௌர்ணமி தினங்களில் நூலகம் மூடப்படும்.
- புத்தகங்களை அனுமதியின்றி வெளியே எடுத்துச் செல்லாதீர்கள்.
- நடை பாதையை உபயோகியுங்கள்.

அறிவுறுத்தல்கள்

- நூலகத்திற்குள் கைத்தொலைபேசியைப் பயன்படுத்தக்கூடாது.
- இரவல் பெற்ற புத்தகங்களை உரிய திகதியில் ஒப்படைக்காவிடின் தண்டப்பணம் அறவிடப்படும்.
- நூலகத்தில் இரவல் பெறும் புத்தகங்களைச் சேதப்படுத்தினால் தண்டப்பணம் அறவிடப்படும்.
- நூலகததத்தில் உள்ள புத்தகங்களை ஒளிப்படம் எடுப்பது தண்டனைக்குரிய குற்றமாகும்.
- சிறுவர் நூலக வாசிப்புப் பகுதிக்குள் சிறுவர்கள் தவிர்ந்த வேறு எவரும் உள்நுழையலாகாது.
- நூல்கள்,சஞ்சிகைகள் போன்றவற்றை வாசித்து முடித்ததும் உரிய இடங்களில் வைத்துவிட்டுச் செல்லவும்.
- உங்களது வீட்டையும் நீங்கள் வாழும் சூழலையும் தூய்மையாக வைத்திருங்கள்.
- இளநீர்க் கோம்பைகள்,தேங்காய்ச்சிரட்டைகள் ஆகியவற்றில் நீர் தேங்கி நிற்க விடாதீர்கள்.
- பூச்சாடிகளின் கீழ் வைக்கப்படும் நீர்ச்சாடிகளில் உள்ள நீரை இரண்டு நாளைக்கு ஒருமுறை அகற்றுங்கள்.

www.lkedu.lk

- குப்பைகளை அகற்றுங்கள் அல்லது குழி தோண்டிப் புதையுங்கள்.
- இதன் மூலம் டெங்குக் காய்ச்சலைப் பரப்பும் நுளம்புகள் பெருகுவதைத் தடுப்போம்.
- நூலகத்திற்குள் கைத்தொலைபேசியை பயன்படுத்தக்கூடாது.
- நூலகத்தில் இரவல் பெற்ற புத்தகங்களை உரிய திகதியில் ஒப்படைக்காவிடின் தண்டப்பணம் அறவிடப்படும்.
- நூலகத்தில் இரவல் பெற்ற புத்தகங்களைச் சேதப்படுத்தினால் தண்டப்பணம் அறவிடப்படும்.
- நூலகத்தில் உள்ள புத்தகங்களை களவு எடுப்பது தண்டனைக்குரிய குற்றமாகும்.
- சிறுவர் நூலக வாசிப்புப் பகுதிக்குள் சிறுவர்கள் தவிர்ந்த வேறு எவரும் உள்நுழையலாகாது.
- வலது பக்கமாகச் செல்லவும்.

கட்டளைகள்

- வாசித்த புத்தகங்களை வலது புறத்திலுள்ள இறாக்கையில் வையுங்கள்.
- சிறுவர் நூல்களைப் பார்வையிட இரண்டாம் மாடிக்குச் செல்லுங்கள்.
- புத்தகங்களைத் தெரிவுசெய்த பின்னர் புத்தக அலுமாரியை மூடிவிடுங்கள்.
- அலுமாரியின் கீழ்த்தட்டில் உள்ள புத்தகங்களை எடுக்காதீர்கள்.
- நூலகத்தினுள் உரத்துப் பேசாதீர்கள்.அமைதியாக இருந்து வாசியுங்கள்.
- பூக்களைப் பறிக்காதீர்கள்.

கண்ட கண்ட இடங்களில் குப்பைகளை இடுவதைத் தவிர்க்கவும்.

- கூட்டுறவுக் கடை காலை எட்டு மணி முதல் மாலை ஐந்து மணி வரை திறந்திருக்கும்.
- வீடுகளில் நீர் தேங்கி நிற்கும் இடங்களைச் சுத்தமாக வைத்திருங்கள்.
- பேருந்தில் பயணச்சீட்டின்றிப் பயணிப்பது தண்டனைக்குரிய குற்றமாகும்.
- பொருட்களை வாங்கும் போது உற்பத்தித் திகதி, காலாவதியாகும் திகதி என்பவற்றைப் பார்த்து வாங்கவும்.
- கர்ப்பிணித் தாய்மார்களுக்காக இவ்வாசனம் ஒதுக்கப்பட்டுள்ளது.
- வைத்தியசாலைக்குள் கைத்தொலைபேசியைப் பயன்படுத்துவது தடைசெய்யப்பட்டுள்ளது.
- மிருகக்காட்சிச் சாலையினுள் பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பாவனை தடைசெய்யப்பட்டுள்ளது.
- எதிர்வரும் சனிக்கிழமை பெற்றோர்களுக்கான கூட்டம் நடைபெறும்.
- நாளை நாடு பூராகவும் இடியடன் கூடிய மழை பெய்யும்.

அறிவுறுத்தல்கள்

- பொலித்தீன்,பிளாஸ்ரிக் பொருட்களை கண்ட இடங்களில் வீசுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.
- நித்திரை கொள்ளும் போது கைப்பேசியைத் தலையணைக்கு அருகில் வைக்க வேண்டாம்.

www.lkedu.lk

- வீதியைக் கடக்கும்போது வலப்பக்கமாகவும்,இடப்பக்கமாகவும் பார்த்து மீண்டும் வலப்பக்கமாகப் பார்த்து மஞ்சள்/வெள்ளைக் கோட்டினூடாகக் கடக்க வேண்டும்.
- விசேட வைத்திய நிபுணரைச் சந்திக்க விரும்புவோர் காலை ஏழு மணிக்கு முன்னர் பெயர்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டும்.
- இடி,மின்னல் ஏற்படும் சந்தர்ப்பங்களில் கைப்பேசியைப் பயன்படுத்த வேண்டாம்.
- பேருந்தில் பயணிக்கும் பயணிகள் பயணச்சீட்டைப் பெறாவிட்டால் தண்டப்பணம் அயவிடப்படும்.
- பூஞ்செடிகளைத் தொடாது பார்க்கவும்.
- மின்சாரவேலி செயற்படுகிறது – அபாயம்
- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- வீதியின் வலது புறமாக நடந்து செல்லுங்கள்.
- உங்கள் சுட்டெண்ணை இந்த அடைப்புக்குள் எழுதவும்.
- கண்ட கண்ட இடங்களில் நெகிழிகளை (பிளாஸ்ரிக்) வீச வேண்டாம்.
- முதலாந் தவணைக்கான பரீட்சைக் கட்டணங்களை எதிர்வரும் திங்கட்கிழமைக்கு முன்னர் செலுத்தவும்.
- கட்டுரைப் போட்டிக்காகத் தமது பெயர்களைப் பதிவு செய்து கொண்ட மாணவர்கள் நாளை முற்பகல் 10.00 மணியளவில் பிரதான மண்டபத்திற்கு வருகை தரவும்.
- நூறு மீற்றர் ஓட்டப் போட்டியில் பங்குபற்றும் விளையாட்டு வீரர்களை போட்டி ஆரம்பமாகும் இடத்திற்கு அனுப்பி வைக்குமாறு இல்லப் பொறுப்பாசிரியர்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.
- மாணவர் மன்றக் கூட்டம் அடுத்த மாதம் முதலாவது வெள்ளிக்கிழமை பி.ப.1.00 மணியளவில் பிரதான மண்டபத்தில் நடைபெறும

**கட்டளைகள்**

- உணவு உண்ட பின்னர் பீங்கான்,கோப்பை போன்றவற்றை இடது புறத்தில் உள்ள தட்டில் வையுங்கள்.
- கீழ்த் தளத்தில் உள்ள பொருட்களை மூன்றாம் மாடியில் உள்ள அறைக்குக் கொண்டு செல்லுங்கள்.
- பல்துலக்கிய பின்னர் பற் தூரிகையைப் பற் தூரிகைப் பெட்டிக்குள் வையுங்கள்.
- கீழ்த்தட்டில் உள்ள பெட்டியிலிருந்து நீலநிறப் பந்தை எடுத்து வாருங்கள்.
- பல்பொருள் அங்காடிக்குள் செல்லும் முன் நீங்கள் கொண்டு வந்த பொருட்களைப் பொருள் பாதுகாப்பாளரிடம் கொடுத்துவிட்டு உள்ளே செல்லுங்கள்.

**விசேட அறிவித்தல்**

- நீர்கொழும்பு மாநகர சபைக்கு உட்பட்ட பகுதிகளில் நாளைக் காலை ஆறு மணி முதல் பன்னிரண்டு மணி வரை நீர் வெட்டு அமுலில் இருக்கும் என தேசிய நீர் வழங்கல்

www.ikeduk

வடிகாலமைப்புச் சபை அறிவித்துள்ளளது. பொதுமக்கள் முன்கூட்டியே நீரைச் சேமித்து வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

- கண்ட கண்ட இடங்களில் எச்சில் துப்ப வேண்டாம்.
- நாளை பெற்றோருக்கான கூட்டம் நடைபெறும்.
- இன்று மாலை இடியுடன் கூடிய மழை பெய்யும்.
- நீரை வீண் விரயம் செய்ய வேண்டாம்.
- நாளை மறுதினம் எமது பாடசாலையின் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான கண் பரிசோதனை நடை பெறும்.
- அடுத்த சனிக்கிழமை (16.02.2019) மு.ப 8.30 மணி முதல் பி.ப 4.00 மணிவரையில் எமது பாடசாலையில் சிரமதான நிகழ்வு நடைபெறும்.
- வீதியின் வலது பக்கமாக நடந்து செல்க.

## அறிவுறுத்தல்கள்

- உங்கள் சுட்டெண்ணை இந்த அடைப்புக்குள் உள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதவும்.
- தொடக்கத்தில் உள்ள உருக்களுடன் தொடர்புபடுத்தும் போது கிடைக்கும் உருவைத் தெரிவு செய்க.
- உருக்கோலத்தில் உள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.
- பின்வரும் ஒவ்வொரு புதிரிலும் மறைந்துள்ள சொல்லைக் கண்டுபிடித்து அதனைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- அடைப்பிலுள்ள சொற்களை மட்டும் பயன்படுத்திச் சரியான கருத்துள்ள நான்கு வாக்கியங்களை எழுதுக. ( ஒவ்வொரு வாக்கியத்திலும் நான்கு சொற்களாவது இடம்பெறுதல் வேண்டும்.)
- நான்கு விடைகள் தரப்பட்டுள்ள வினாக்களில் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.
- விடைகள் எழுத்தப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- இவ்வனாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இத்தாளிலேயே எழுதுக.
- சோடிச் சொற்களுக்கு உரிய பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.
- வெற்றிடங்களுக்கப் பொருத்தமான விடைகளைத் தெரிவு செய்க.
- தரப்பட்டுள்ள கூற்றுக்களில் சரியான கூற்றுக்களுக்கு "✔" அடையாளத்தையும் தவறான கூற்றுக்களுக்கு "✘"அடையாளத்தையும் உரிய கூடுகளுக்குள் இடுக.
- 21 ஆம் 22 ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள கூற்றுக்கள் கருத்தற்றவை. இக் கூற்றுக்கள் ஏன் கருத்தற்று இருக்கின்றன என்பதைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.
- கத்தரிக்கோலால் கடதாசியை இரு பகுதிகளாக வெட்டுக.
- சரியான விடையை தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

www.lkedu.lk